# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • மார்ச் 30, 2019    Weekly E-paper • March 30, 2019




**பாஜக கூட்டணி ஊழலற்ற கூட்டணியா?**

பேரா. நீலகிருஷ்ணபாபு



**கோமாளியின் கதறல்!**

-சுபவீ



**பிரின்ஸ் கஜேந்திர பாபு**

நேர்காணல்

-மா.உதயகுமார்



# திமுக கூட்டணி மதச்சார்பற்ற கூட்டணியா?

-சுப. வீரபாண்டியன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையிதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● மார்ச் 30, 2019 Weekly E-paper ● March 30, 2019


## திமுக கூட்டணி மதச்சார்பற்ற கூட்டணியா?

● சுப. வீரபாண்டியன்



வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலையொட்டித் தமிழ்நாட்டில் அமைந்துள்ள கூட்டணியை, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி என்று அழைக்கின்றோம். எதிர்த்தரப்பினர் ஒரு வினாவை எழுப்புகின்றனர். முஸ்லீம் லீக் உள்ளிட்ட சிறுபான்மையினரின் கட்சிகள் சிலவற்றை அருகில் வைத்துக்கொண்டு, "மதச்சார்பற்ற" என்று சொல்வது எப்படிச் சரியாகும்? நியாயம் போலத் தோன்றுகின்ற இவ்வினாவிற்கு விடையளிக்க வேண்டிய கடமை நமக்கு உள்ளது.

நாம் நம் கூட்டணியை, மதச்ச்சார்பற்ற கூட்டணி என்றுதான் அழைக்கிறோமே அல்லாமல், மத நம்பிக்கையற்ற கூட்டணி என்று அழைக்கவில்லை. மதச்சார்பு, மத நம்பிக்கை, மதவாதம் ஆகிய சொற்களுக்கு இடையில் உள்ள வேறுபாட்டினை நாம் எளிதில் கடந்து போய்விட முடியாது.

நம் நாட்டில் மத நம்பிக்கை உடையவர்களே மிகுதி என்பதை நாமே மறுப்பதில்லை. மறுக்க வேண்டியதுமில்லை. அவர்கள் எல்லாக் கட்சியிலும், எல்லாக் கூட்டணியிலும் உள்ளனர். அதனால்தான் மத நம்பிக்கையற்ற என்னும் தொடரை நாம் பயன்படுத்தவில்லை. மதச் சார்பு என்பது வேறு. நம் கூட்டணி ஆட்சிக்கு வருமானால், அமையும் அரசு, ஒரு மதத்திற்குச் சார்பாகவும், பிற மாதங்களுக்கு எதிராகவும் செயல்படாது என்பதே மதச்ச்சார்பற்ற என்னும் சொல்லுக்குப் பொருளாகும். இதனைத்தான் நம் அரசமைப்புச் சட்டமும், secular என்னும் சொல்லின் மூலம் குறிப்பிடுகின்றது.

அரசமைப்புச் சட்டமே ஏற்றுக்கொண்டுள்ள ஒன்றை, நாம் ஏன் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்? இன்று இருக்கின்ற பாஜக அரசு, இந்துமதச் சார்பு உடையதாக இருக்கிறது. இந்துமத நம்பிக்கைகளை, இந்துமதத்தின் உணவுப் பழக்கங்களைப் பிற மதத்தினர் மீது திணிக்கிறது. இந்தப் போக்கு, ஜனநாயகத்திற்கும், மனித உரிமைக்கும் எதிரானது. ஆகவே அதனை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.

அதனை எதிர்க்கும் நீங்கள் ஆட்சிக்கு வந்தால், உங்கள் ஆட்சி எப்படியிருக்கும் என்ற வினா எழுவது இயல்பே. அந்த ஐயத்தைப் போக்கும் வகையில் கூட்டணியின் பெயர் அமைந்துள்ளது என்று கூறலாம். நம் கூட்டணி ஆட்சிக்கு வந்தால், எல்லா மதங்களும் சமமாக நடத்தப்படும், எவருடைய உரிமையும் மறக்கப்படாது என்பதை விளக்குவதற்காகவே 'மதச்ச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி" என்று தெளிவாகப் பெயரிடப்பட்டுள்ளது.

ஆதலால், திமுக கூட்டணி, மதச்ச்சார்பற்ற கூட்டணியே ஆகும்! ●

## பாஜக கூட்டணி ஊழலற்ற கூட்டணியா?

● பேரா. நீலகிருஷ்ணபாபு



வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்து நீதிமன்றத்தால் 4 வருடத் தண்டனையும் 100 கோடி அபராதமும் விதிக்கப்பட்டு முதல்வர் பதவியை இழந்த ஜெயலலிதா, குட்கா ஊழல், முட்டை ஊழல், மணல் குவாரி ஊழல்,மின்சாரம் வாங்கியதில் ஊழல், பேருந்துக் கட்டண ஊழல் என துறைதோறும் ஊழலை ஊக்குவித்து வருகிற இபிஎஸ், ஓபிஎஸ் இவர்களின் அதிமுக.

மருத்துவக் கல்லூரி முறைகேட்டில் சிபிஐயால் குற்றஞ்சாட்டப்பட்டு இன்றும் நீதிமன்றத்திற்கு வர அஞ்சி வழக்கை இழுத்தடித்துக் கொண்டிருக்கும் முன்னாள் மத்திய சுகாதரத்துறை அமைச்சர் அன்புமணியின் பாமக.

ஊழலின் தாய் என ஊடகங்களால் வர்ணிக்கப்பட்ட ம.பியின் வியாபம் ஊழல், உ.பியில் கங்கையைச் சுத்தப்படுத்தும் திட்டத்தில் ஊழல், மகராஷ்டிராவில் சத்துணவில் வழங்கப்படும் கடலை மிட்டாய் ஊழல், சத்தீஸ்கரில் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தில் ஊழல், இராஜஸ்தானில் மார்பிள் சுரங்க ஒதுக்கீட்டில் ஊழல், ஹரியானாவில் பொது விநியோகத் திட்டத்தில் ஊழல், குஜராத்தில் மீன்பிடி ஏரிகள் குத்தகை ஊழல், கர்நாடகாவில் ரெட்டி சகோதரர்களின் இரும்புத் தாது ஏற்றுமதி ஊழல் என, தான் ஆண்ட, ஆளும் மாநிலங்களில் அனைத்துத் துறைகளிலும் ஊழலில் ஊறிப்போயுள்ள பாஜக வின் மோடி அரசு செய்துள்ள ரஃபேல் ஒப்பந்த ஊழலை எதிர்க்கட்சிகளும் ஊடகங்களும் வெளியிட்ட பிறகும் இன்று வரை வழக்கைக்கூடப் பதிவு செய்யாமல் பயந்து நடுங்குகிற 'சௌகிதார்' மோடி ஆவணங்கள் தொலைத்து விட்டதாக புதிய நாடகத்தை அரங்கேற்றியுள்ளார்.

இப்படி ஊழல்வாதிகளின் கூடாரமாகத் திகழ்கிற பாஜக - அதிமுக - பாமக கூட்டணியை வீழ்த்தி வீட்டுக்கு அனுப்புவதே நாம் நாட்டுக்குச் செய்கிற நன்மை. ●

# கோமாளியின் கதறல்!

## பார்த்து ரசித்துப் பரவசம் கொள்க!

● சுப. வீரபாண்டியன்



பெண் ஊடகவியலாளரைப் பற்றித் தரக்குறைவாகப் பேசிவிட்டு, அதற்கு கடுமையான எதிர்ப்புகள் வந்தபின் ஓடி ஒளிந்து கொண்ட ஒரு கோமாளி நடிகர், இப்போது திராவிடர் கழகத் தலைவர், தமிழர் தலைவர் ஆசிரியர் வீரமணி அவர்கள் குறித்து, மிக இழிவாகவும், தரக்குறைவாகவும் முகநூல் நேரலையில் பேசியுள்ளார். கழகத்தினரை மட்டுமின்றி, அதனைச் செவிமடுக்கும் பொதுவானவர்களைக் கூடச் சினம்கொள்ள வைக்கும் வகையில் அந்தப் பேச்சு அமைந்துள்ளது.

கிருஷ்ணரைப் பற்றியும், அவரது லீலைகள் பற்றியும் ஆசிரியர் ஆபாசமாகப் பேசிவிட்டாராம். உடனே அந்த வீராதி வீரர், பொங்கி எழுந்து ஆசிரியர் குறித்தும், கடவுள் மறுப்பாளர்கள் குறித்தும், இதனை விட இழிவாகப் பேச முடியாது என்ற அளவில் பேசியுள்ளார்.

சென்னை, பெரியார் திடலில் நடைபெற்ற கூட்டத்தில், ஆசிரியர் குறிப்பிட்ட கிருஷ்ண லீலைகள் எதுவும் அவர் எழுதியதில்லை. புராணங்களில் உள்ள ஆபாசங்களை, அக்னிஹோத்ரம் ராமானுஜ தாத்தாச்சாரியார் நூலிலிருந்து எடுத்துப் படித்தார். அவ்வளவுதான். அதுவும் கூட எதற்காக என்றால், பொள்ளாச்சியில் நடைபெற்றது போன்ற பாலியல் வன்முறைகளுக்கெல்லாம் காரணம் பெரியாரும், வீரமணியும்தான் என்று துக்ளக் ஏடு எழுதி வீண் வம்பை இழுத்ததால், யார் காரணம் என்று சொல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு அதனைப் படித்துக் காட்டினார்.

கோமாளி நடிகரும், வேறு சில வன்முறை அமைப்புகளும் இப்போது ஆசிரியர் மீது கோபப்படுவது போலக் காட்டிக் கொள்வதற்குக் கூட, கிருஷ்ணர் மீது உள்ள பக்தி காரணம் இல்லை. இதனைக் காரணமாக வைத்து, வரும் தேர்தலில் திமுக விற்கு ஆதரவான வாக்குகளைப் பிரித்து விடலாம் என்பதுதான் அவர்களின் நோக்கம். அந்த கோமாளியின் பேச்சின் இறுதியிலேயே அந்தப் பூனையும் வெளிவந்து விடுகின்றது. "எனவே யாரும் திமுக கூட்டணிக்கு வாக்களிக்காதீர்கள்" என்று அந்த உளறல் முடிகிறது.

தரங்கெட்ட அந்தப் பேச்சைக் கேட்டுச் சினம் கொண்டு, நம் உணர்வாளர்கள் எதிர்வினையாற்றுவார்கள், அது தேர்தலில் ஒரு பிரச்சினையாகிவிடும் என்று அவர்கள் கருதினார்கள். ஆனால் யாரும் அந்தப் பேச்சை மதிக்கவுமில்லை, விடை சொல்லவுமில்லை.

இதுபோன்ற ஏமாற்று வேலைகள் எல்லாம் மிகப் பழையவை. 1971இல் பெரியார் சேலத்தில் இராமரைச் செருப்பால் அடித்துவிட்டார் என்று ஊர் ஊராகப் போய்ச் சொன்னார்கள். அப்போது இராமர் இவர்களிடம் பட்டபாடு மிகவும் பரிதாபத்திற்குரியது. இராமரைச் செருப்பால் அடித்த பெரியார் ஆதரிக்கும் திமுகவிற்கா உங்கள் ஒட்டு என்று கேட்டு ஒப்பாரி வைத்தனர். இறுதியில், திமுக வரலாறு காணாத வெற்றி பெற்றது. சேலத்திலும் கூட திமுகதான் வெற்றி பெற்றது.

இந்தக் கோமாளிகளுக்கு நாம் சொல்லவேண்டிய விடை ஒன்றே ஒன்றுதான். அதனை மக்கள் ஏப்ரல் 18 அன்று சொல்வார்கள். நீங்கள் என்னதான் தலைகீழாய் நின்று பார்த்தாலும், திமுகவையும், மக்களையும் பிரிக்க முடியாது என்பதை அன்று மக்கள் உணர்த்துவார்கள்.

ஆதலால், நம் தோழர்கள் யாரும் உணர்ச்சிவயப்பட்டு, அவர்களுக்கு எந்த விடையும் சொல்ல வேண்டியதில்லை. மாறாக, அவர்களின் கதறலை அமைதியாக ரசித்திட இது ஓர் அரிய வாய்ப்பு என எண்ணி மகிழ்வோம்! ●

மதச்சார்பற்ற திமுக கூட்டணிச் சின்னங்களுக்கு



வாக்களியுங்கள்!

கருஞ்சட்டைப் பதிப்பகம்

இணையத்தள விற்பனை (online sales)

கருஞ்சட்டைப் பதிப்பக வெளியீடுகளும், தோழர் சுபவீ, பேராசிரியர் அருணன் ஆகியோர் எழுதியுள்ள பிற நூல்களும் இப்போது இணையத்தள விற்பனையில் உள்ளன. இந்தியாவின் எந்தப் பகுதியிலிருந்தும் நூல்களை இணைய வழியில் அனைவரும் பெற்றுக்கொள்ளலாம். வங்கி அட்டைகள் மூலமோ, அல்லது வீட்டிற்குப் புத்தகம் வரும்போது பணம் செலுத்தியோ நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இணையத்தள முகவரி : karunchattaibooks.com

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## சென்னை



26.3.2019 அன்று தென்சென்னை திமு கழக வேட்பாளர் தயாநிதி மாறனுக்கு வாக்குகள் சேகரித்த திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைமைக் குழு உறுப்பினர் தோழர் மாறன்.

## தஞ்சாவூர்



26.3.2019 அன்று தஞ்சை திமு கழக வேட்பாளர் டி.கே.ஜி. நீலமேகத்திற்கு வாக்குகள் சேகரித்த திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தஞ்சை மாவட்டச் செயலாலர் புலவர் செல்லக் கலைவாணன்.

## திண்டுக்கல்



திண்டுக்கல் தேர்தல் பரப்புரையின் போது தி.மு. கழகத் தலைவருடன் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் கொள்கைப் பரப்புச் செயளாலர் தோழர் வேடசந்தூர் ரவி.

## திருப்பெரும்புதூர்



திருப்பெரும்புதூர் நாடாளுமன்றக் கழக வேட்பாளர் டி.ஆர்.பாலுவின் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் திருவள்ளூர் மாவட்டத் தலைவர் தோழர் ராஜு.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஏப்ரல் 18 - மக்கள் கடமை!

நான் டீக்கடை வைத்து டீ போட்டுக் கொண்டிருந்த ஏழைத் தாயின் மகன் என்றார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.

அடுத்த நாளே 10 லட்ச ரூபாய் மதிப்புள்ள ‘கோட்’டை மாட்டிக்கொண்டு விமானத்தில் பறந்துவிட்டார் வெளிநாட்டுக்கு.

தீவிரவாதத்தை ஒழிக்கப் போகிறேன் என்று கிளம்பிய அவர் 40க்கும் பேற்பட்ட சிஆர்பிஎப் வீரர்களை எதிரிகளின் தற்கொலைப் படைக்குப் பலிகொடுத்துவிட்டு வந்து நின்றார்.

ரஃபேல் ராணுவ விமான ஊழல் வழக்கில் சம்மந்தப் பட்ட முக்கிய ஆவணங்கள் திருடு போய்விட்டன என்று பரிதாபமாகச் சொன்னார்.

சென்ற தேர்தலின் போது கருப்புப் பணத்தை மீட்டு ஒவ்வொருவருக்கும் 15 லட்ச ரூபாய் வங்கிக் கணக்கில் போடுகிறேன் என்றார்.

இந்தத் தேர்தலில் விண்ணில் பறக்கும் ஒரு செயற்கைக் கோளை ஏவுகணை விட்டு அழித்துவிட்டேன் என்று ஒரு கதை சொல்லிக் கொண்டிருக்கிறார்.

ஒரு பிரதமர் நாட்டு மக்களுக்குச் செய்ய வேண்டிய மக்கள்நலப் பிரச்சனைகளை எல்லாம் விட்டுவிட்டு இப்படி வெட்டியாகப் பேசிக் கொண்டிருப்பதையே ஒரு தொழிலாக வைத்துக் கொண்டிருக்கிறார் என்றால் அது இந்த நாட்டுக்கு அவமானம் இல்லையா?

தமிழ்நாட்டில் தூத்துக்குடிச் துப்பாக்கிச் சூடு தொடங்கி வேளாண் மாவட்டங்களான தஞ்சை விவசாயிகள் வரை மோடி செய்த துரோகங்களுக்கு என்ன பதில் சொல்லப் போகிறார் அவர்.

தமிழக அதிமுக அரசை தன் கைப்பாவையாக வைத்துக் கொண்டு ஆளுநர் பன்வாரிலால் மூலமாக மாநில உரிமைகளில் தலையிட்டு நிர்வாகச் சீர்கேட்டிற்குக் காரணமாக இருப்பவர் மோடி.

தமிழக அரசு நிலை குலைந்து, ஊழல் மலிந்த அரசாகத்தான் இருக்கிறது.

அரசு அதிகாரத்தைப் பயன்படுத்திக் கடந்த 5 ஆண்டுகள் காட்டாட்சி செய்து கொண்டிருந்த மத்திய மோடியின் தலைமையிலான பாஜக ஆட்சியையும், கையாலாகாத மோடியின் எடுபிடியாகச் செயல்படும் தமிழக எடப்பாடியின் தலைமையிலான அதிமுக ஆட்சியையும் அகற்றுவதற்கான நேரம் நெருங்கிவிட்டது.

குறுந்தொழில், சிறுதொழில்கள் நசிந்தது மட்டுமில்லாமல் வடநாட்டுத் தமிழ் தெரியா மக்களை தமிழ்நாட்டில் அதிக அளவில் மத்திய அரசு வேலைகளில் அமர்த்தி, தமிழக இளைஞர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் உருவாகக் காரணமாக இருந்த மோடி ஆட்சியையும், அதற்கு துணையாயிருந்த அதிமுக ஆட்சியையும் விரட்ட வேண்டிய நேரம் வந்து விட்டது.

ஏப்ரல் 18 மறக்கவேண்டாம். மதச்சார்பற்ற திமு கழகக் கூட்டணிக்கு வாக்களித்து அமோக வெற்றிப் பெறச் செய்து, பாஜ கூட்டணியைப் படுதோல்வி அடையச் செய்வது மக்கள் கடமை.

# கல்வியைச் சந்தையாக்கும் முயற்சியே நீட்

## நேர்காணலில் கல்வியாளர் பிரின்ஸ் கஜேந்திர பாபு

**நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்க, சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் அது என்ன ஆனது என்றே தெரியவில்லை. இதில் அதிமுகவின் செயல்பாடு பற்றி...**



சட்டத்தின்படி ஆட்சி நடந்திருந்தால், அரசமைப்புச் சட்டத்தின்படி தமிழ்நாட்டிற்கு நீட் தேர்விலிருந்து விலக்கு கிடைத்திருக்க வேண்டும். 2007 ஆம் ஆண்டே குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெற்று தமிழ்நாட்டில் நுழைவுத் தேர்வை ரத்து செய்து ஒரு சட்டம் இருந்தது.

மத்திய அரசு நீட்டை நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்த போது தமிழ்நாடு அரசு மீண்டும் ஒரு சட்டத்தை இயற்றிக் குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு அனுப்பியது. சட்டம் குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்படாமல் அது உள்துறை அமைச்சகத்திலே இருக்கிற போது அதை அனுப்பச் சொல்லி மத்திய அரசை வலியுறுத்தியிருக்க வேண்டும். நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இது குறித்து கேள்வி எழுப்பியிருக்க வேண்டும். அ.இ.அ.தி.மு.க வைச் சேர்ந்தவர்கள் 37 பேர் உறுப்பினர்களாக இருக்கின்றனர். ஏன் அவர்கள் கேள்வி எழுப்பவில்லை? பல்வேறு காரணங்களுக்காக நாடாளுமன்றத்தை முடக்கியவர்கள் சட்டமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட சட்ட மசோதா எதற்காக உள்துறை அமைச்சகத்தில் இருக்கிறது என்று நாடாளுமன்றத்தில் வலுவாகக் குரல் எழுப்ப வேண்டியவர்கள் ஏன் குரல் எழுப்பவில்லை? துணை சபாநாயகராக இருந்த தம்பிதுரை ஏன் இது பற்றி பேசவில்லை. ஏன் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவில்லை? இந்த சட்டப்பேரவை இருக்கிற வரைக்கும் நாம் எதுவும் செய்யமுடியாது.

சட்டப்பிரிவு 246 அட்டவணைschedule 7 இல் மூன்று பட்டியல்கள் உள்ளன. 1.Union List, 2. State List, 3.Concurrent List. பட்டியல் 1 வரிசை 44 பல்கலைக்கழகங்களை உருவாக்க கலைக்க மத்திய அரசுக்கு உரிமையில்லை என்று சொல்கிறது. பட்டியல் 2 வரிசை 32 - பல்கலைக்கழகங்களை உருவாக்க ஒழுங்குபடுத்த கலைக்க மாநில அரசுக்கே உரிமையுண்டு என்று சொல்கிறது. கல்வி பட்டியல் 3 இல் இருக்கிறது. அதில் வரிசை 25 தரத்தைத் தீர்மானித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் பற்றி பேசுகிறது. மாணவர் சேர்க்கை, கட்டணம் தீர்மானித்தல் ஒழுங்குப்படுத்துதலுக்குக் கீழ் வருகிறது. ஒழுங்குபடுத்துதல் மாநில அரசிற்கு இருக்கிற உரிமை. இந்த ஒழுங்குபடுத்துதல் குறித்து சட்டம் இயற்றுவதற்கு மாநில சட்டப்பேரவையே மிகவும் பொருத்தமானது என உச்சநீதிமன்றத்தின் 5 நீதிபதிகளைக் கொண்ட அரசமைப்பு அமர்வு Modern Dental College வழக்கில் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. இவ்வளவு தெளிவாக அரசமைப்புச் சட்டமும் நீதிமன்றத் தீர்ப்பும் இருக்கின்ற வேளையில் மாநில உரிமை பறிபோவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது நியாயமா?

**நீட் தேர்வில் எந்த அளவிற்கு ஏற்றத்தாழ்வு இருக்கிறது?**

வசதி படைத்தவர்களும், பணம் வைத்திருப்பவர்களும் மட்டுமே இனி மருத்துவக் கல்லூரியில் சேர முடியும். மூன்று முறை நீட் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம். வயது உச்ச வரம்பு கிடையாது. பத்திரிக்கைச் செய்திகளின் படி கடந்த இரண்டு ஆண்டுகளில் 50% மேற்பட்டோர் குறைந்த பட்சம் ஓராண்டாவது நீட்டுக்காகப் பயிற்சி எடுத்தவர்கள். மூன்று ஆண்டுகள் வரைக்கும் ஒருவர் படித்துவிட்டு நீட் எழுதுவார். இன்னொருவர் அரசு மேல்நிலைப்பள்ளியில் படித்துக் கொண்டு நீட் எழுதுவார். இருவரும் சமப் போட்டியாளர்களா? இதில் யார் வெற்றிபெறுவார்கள்?

**சட்டத்தையும் மீறி நீட் தேர்வு திணிக்கப்படுவதன் நோக்கம்?**

தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வித்துறை தேர்வு இயக்ககம் வைத்திருக்கிறார்கள். தமிழ்நாடு அரசால் தேர்வு செய்யப்பட்ட தகுதிவாய்ந்த முதுகலை ஆசிரியர்கள், அரசு அதிகாரிகளால் தேர்வு நடத்தப்பட்டு கொடுக்கப்படும் சான்றுக்கு எந்த மதிப்பும் தரமாட்டோம். பல்கலைக்கழகங்கள் தான் மாணவர் சேர்க்கை குறித்து தீர்மானிக்க வேண்டும். ஆனால் பல்கலைக்கழகங்களுக்கு அந்த உரிமையை நாங்கள் தர மாட்டோம். National Testing Agency என்ன தகுதி இருக்கிறது. மாநில ஆசிரியர்களைவிட இவர்கள் சிறந்தவர்கள் என்று சொல்ல என்ன ஆதாரம் இருக்கிறது. இதன் நோக்கம் மாநில உரிமைகளைப் பறித்துவிட்டு ஒற்றை ஆட்சியில் நாட்டை நடத்துவது. பின்னர் யார் வேண்டுமானாலும் தேர்வு நடத்தலாம் என்று வணிக ரீதியாக இதனை மாற்றுவது. சந்தையில் ஒரு அமைப்பின் மதிப்பைக் கூட்டிவிட்டு அதில் படிப்பதே சிறந்தது என்கிற நிலையை உருவாக்கிவிட்டால் அரசாங்கம் பல்கலைக்கழகமே நடத்த வேண்டியதில்லை. ஒட்டுமொத்தமாகச் சமூகநீதியைக் குழிதோண்டிப் புதைத்துக் கல்வியைச் சந்தையில் கொண்டுபோய் கொடுக்கும் முயற்சி இது.

**தமிழ்நாட்டைத் தவிர மற்ற மாநிலங்கள் எதிர்க்கவில்லை என்று சொல்லப்படுவது பற்றி...**

சட்டீஸ்கரில் போராட்டம் நடந்தது. மம்தா பானர்ஜி எதிர்த்தார்கள். ஒடிசாவில் இருந்தும் எதிர்ப்புகள் இருந்தது. பல மாநிலங்களிலும் எதிர்ப்புகள் இருந்தன. அளவு வேண்டுமானால் மாறியிருக்கலாம். குஜராத்தில் நரேந்திர மோடி முதல்வராக இருந்த 13 ஆண்டுகளில் ஒரு மாநில அரசு மருத்துவக் கல்லூரி கூட திறக்கப்படவில்லை. அதே காலகட்டத்தில் இங்கு பல மாநில அரசு மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்பட்டன. பல மாநிலங்களில் மருத்துவக் கல்லூரிகளே கிடையாது. பல மாநிலங்களில் சீட்டுகளின் எண்ணிக்கை மிகவும் குறைவு. தமிழ்நாட்டில் மட்டும் தான் இந்தியாவிலேயே மருத்துவக் கல்லூரிகளும் அதிகம் சீட்டுகளும் அதிகம். இயல்பாக இங்கு எதிர்ப்பு வராதா? சமூகநீதிக்கான போராட்டக்களம் தமிழ்நாடு. முதல் சட்டத்திருத்தமே பெரியாரால் வந்தது.

நேர்காணல்:
**தோழர் மா.உதயகுமார்**

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secretary, Dravida Iyyakka Tamilar Peravai.